தமிழை வாசிப்போம்! நேசிப்போம்! சுவாசிப்போம்!

குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம்

Kurinji Muthamizh Sangam

# நிகழினி இதழ்

## NIGAZHINI MAGAZINE

ஆசிரியர் : சந்திரா ஸ்ரீதர்

பதிப்பு :2023/2



**Editor : Mrs.Chandra Srithar**
**ஆசிரியர் :திருமதி. சந்திரா ஸ்ரீதர்**

ஆசிரியர் இலாகா விளம்பரம் முகவரி
5252 E 130th circle
Thornton
Colorado 80241,USA.
chandra.srithar01@gmail.com

இந்த இதழில் நிர்வகிக்கபட்ட படைப்புகள் அனைத்தும் வாசகர்கள் நல்ல தமிழ் படிக்கும் நோக்கத்தில் இடம் பெறுகின்றன.

பேட்டிகள் மற்றும் சிறப்புக்கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அதை எழுதியவர்களின் சொந்தக் கருத்துகளே!

எந்தவொரு நகல் உரிமைச் சிக்கலுக்கும் உண்மைத்தன்மைக்கும் குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம் பொறுப்பல்ல.

## ஆசிரியர் பக்கம்

நிகழினி நிரந்தரம்!

குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம், "**நிகழினி இதழ்**" தமிழ் சமூகத்திற்காக டிஜிட்டல் வடிவில் வெளியிடுவதில் பெருமை அடைகிறது.

நிகழினி என்றால் மங்கா அறிவொளி பொருந்தியவள், பிரகாசமாக சொலிப்பவள் என்று பொருள்.

இந்த இதழ் தொன்மையான நம் தமிழ்மொழியை நேசிக்கும் மக்களின் சுயபடைப்புகள் மற்றும் நிர்வகிக்கப்பட்ட படைப்புகளை உங்கள் வாசிப்புக்காகக் கொண்டு வரும்.

இந்த இதழில் உங்கள் பங்களிப்பை வரவேற்கிறோம். மகிழ்ச்சியாக வாசியுங்கள் !

தேடிச் சோறுநிதந் தின்று - பல
சின்னஞ் சிறுகதைகள் பேசி - மனம்
வாடித் துன்பமிக உழன்று - பிறர்
வாடப் பலசெயல்கள் செய்து - நரை
கூடிக் கிழப்பருவ மெய்தி - கொடுங்
கூற்றுக் கிரையெனப்பின் மாயும் - பல
வேடிக்கை மனிதரைப் போலே - நான்
வீழ்வே னென்று நினைத் தாயோ?

– மகாகவி பாரதியார்

பாரதியாரின் இவ்வரிகளுக்கிணங்க, வாழ்க்கைக்கு வயதாகலாம்,
ஆனால் தமிழ் மொழி, நம் வாழ்க்கைக்கு ஒரு வழியாகுமே தவிர
ஒருபோதும் வீழாது.

எத்தனை தலைமுறை என்றாலும் இளைய தலைமுறைதான் ஏணிப்படி!
அந்த வழியில் அடுத்த தலைமுறையின் அடையாள சின்னமான
நம் நிகழினி இதழின் துணை ஆசிரியராக செல்வன் சூர்யா
வெங்கடரமணியை அறிமுகம் செய்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழோடு வாழ்வோம்!
உலகையே ஆள்வோம்!

இங்ஙனம்
**திருமதி.சந்திரா ஸ்ரீதர்**
ஆசிரியர்



வணக்கம்!

என்னை நிகழினி இதழ் துணை-ஆசிரியராக நியமித்த குறிஞ்சி முத்தமிழ்ச் சங்க நிர்வாகிகளுக்கு நன்றி. இந்த வாய்ப்பினால் தான் நான் இன்று தமிழில் இந்த கட்டுரையை எழுதுகிறேன்.

எனக்கு தமிழில் நன்றாக பேசமுடியும். இந்த வாயிப்பினால் மிகவிரைவில் நான் தமிழில் நன்றாக எழுத பயிற்ச்சி பெறுவேன்.

சிறுவயதிலிருந்தே இங்கு வாழ்கின்ற தமிழ் குழந்தைகள் தமிழில் பேசுவதுக் கூட இல்லை. அப்படிப்பட்ட குழந்தைகள் தமிழில் பேச, எழுத, படிக்க என்னால் முடிந்த முயற்சிகளை செய்வேன். பெரியவர்கள் தங்கள் குழந்தைகளுடன் தமிழில் பேசுவதை வழக்கமாக ஆக்குவது அவர்களுடைய முக்கியமான கடமையாகும். அவர்கள் தமிழில் பேச கஷ்டப்படும் போது அவர்களை பார்த்து சிரிக்காமல் அவர்களுக்கு தமிழ் கற்றுக்கொடுக்க வேண்டும்.

நம் வாழ்க்கையில் முன்னேற பல நல்வழிகளை தமிழ்மொழியில் எழுதப்பட்டு இருக்கின்றன. நாமும் தமிழ் மொழியில் பேச, எழுத, படிக்க முயற்ச்சி செய்வோம் வாருங்கள்!

வாழ்க தமிழ்!



சூர்யா வெங்கடசுப்ரமணி

# திருக்குறள் அறிவோம்



தமிழில் உள்ள நூல்களிலேயே சிறப்பிடம் பெற்ற நூல் திருக்குறள்.இது அடிப்படையில் ஒரு வாழ்வியல் நூல். மனித வாழ்வின் முக்கிய அங்கங் களாகிய அறம் அல்லது தர்மம், பொருள், இன்பம் அல்லது காமம் ஆகியவற்றைப் பற்றி விளக்கும் நூல். இந்நூலை இயற்றியவர் திருவள்ளுவர்

**அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு**.

**திருவள்ளுவர்**.

திருக்குறள் எண் : 1
பால் : அறத்துப்பால்
அதிகாரம் : கடவுள் வாழ்த்து
இயல் : பாயிரவியல்

### திருக்குறளின் அதிசயங்கள்

- ✓ திருக்குறளில் தமிழ், என்ற சொல் பயன்படுத்தப்படவில்லை,
- ✓ திருக்குறளில் உள்ள மொத்த எழுத்துக்கள் - 42,194
- ✓ திருக்குறளில் தமிழ் எழுத்துக்கள் 247 - ல் 37 எழுத்துக்கள் மட்டும் இடம் பெறவில்லை
- ✓ திருக்குறளில் இடம் பெறும் இருமலர்கள் - அனிச்சம், குவளை
- ✓ திருக்குறளில் இடம் பெறும் ஒரே பழம் - நெருஞ்சிப்பழம்
- ✓ திருக்குறளில் இடம் பெறும் ஒரே விதை - குன்றிமணி
- ✓ திருக்குறளில் பயன்படுத்தப்படாத ஒரே உயிரெழுத்து - ஔ
- ✓ திருக்குறளில் இடம்பெற்ற இரண்டு மரங்கள் - பனை, மூங்கில்
- ✓ திருக்குறளில் அதிகம் பயன்படுத்தப்பட்ட ஒரே எழுத்து - னி (1705)
- ✓ திருக்குறளில் ஒரு முறை மட்டும் பயன்படுத்தப்பட்ட இரு எழுத்துக்கள் - ளீ , ங
- ✓ திருக்குறளில் இடம்பெறாத ஒரே எண் - ஒன்பது
- ✓ திருக்குறள் இதுவரை 26 மொழிகளில் வெளிவந்துள்ளது
- ✓ திருக்குறளை ஆங்கிலத்தில் 40 பேர் மொழிபெயர்த்துள்ளனர்

# தமிழ் அறிஞர் திருமதி. பாரதி பாஸ்கர் அவர்களின் சிறப்புரை



குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கத்தின் துவக்கவிழா மற்றும் நிகழினி இதழ் வெளியீட்டு விழாவில், தமிழ் அறிஞர் மற்றும் பட்டிமன்றப் பேச்சாளர் **திருமதி. பாரதி பாஸ்கர் அவர்கள்** காணொளி வழியாக வந்தாலும் கண்சிமிட்டக் கூட முடியாமல் வியக்க வைத்த அவரது பேச்சு, தமிழ் மொழியின் வளர்ச்சி வேரைக் கண்டுபிடிக்க உறுதுணையாய் இருந்தது.

இளைஞர்களைப் பொறுப்பில் கொண்டுவரவேண்டும் என்ற திரு. சுகுமாறன் மாரியப்பன் அவர்களின் எண்ணம் என்னை இங்கு கொண்டுவந்து சேர்த்தது என்றும் புதுப்புதுத் தமிழ்ச்சங்கம் வரக் காரணம், எப்படியாவதுஅடுத்த தலைமுறைக்கு நமது மொழியைக் கொண்டு சேர்க்கவேண்டும் என்ற ஏக்கம் மட்டுமே அதற்குக் காரணம் என்று அழகாய் உண்மையை உரக்கக் கூறினார்.

மேலும் மொழிப்பற்று ஏன் தேவை? நம் குழந்தைகள் கேட்கும் முதல் கேள்வி? அதோடு பிறந்தது முதல் நான் கேட்டு வளர்ந்த மொழி ஆங்கிலம், என் காதிலேயே விழாத மொழியை நான் ஏன் கற்றுக்கொள்ளவேண்டும் என்ற அக்குழந்தைகளின் கேள்விக்கான பதில் ஒன்றுதான்.அதுதான் உலகமயமாக்கல் என்ற வார்த்தையிலிருந்து திரும்பி வேரைத் தேடிப் போதல் என்று அருமையான ஒரு விளக்கத்தைக் கொடுத்தார்.

**அப்படி வேர்களுக்குத் திரும்பி போதல் என்றால் என்ன ?**
நாம் எங்கிருந்து வந்தோம் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். உங்கள் குழந்தைகள் அமெரிக்காவில் பிறந்திருந்தாலும், அவர்கள் வேர் என்பது இந்த மண்ணில் கிடையாது. அவர்கள் கிளை விரித்துப் பரவி நிற்பது இந்த மண்ணில், ஆனால் அவர்கள் வேர் என்பது வேறொரு மண்ணிலே இருக்கிறது. எனவே வேரோடு தொடர்பு கொள்வது என்னவென்று குழந்தைகள் தெரிந்துகொள்ள வேண்டும் என்றும், நம் கலாச்சாரம், பண்பாட்டோடு அவர்கள் இருக்கவேண்டும் என்றும் அதற்கான முதற்படி மொழியோடு இருப்பதுதான் என்று ஆணித்தரமாய் எடுத்துரைத்தார்.

அதுமட்டுமின்றிப் பண்பாட்டிற்குப் பல கூறுகள் இருக்கின்றது, அவை மதம், உணவு, உடை, இறை நம்பிக்கை என நிறைய இருக்கிறது. ஆனால் இவை அனைத்திற்கும் ஆணிவேர் மொழிதான். மொழியிலிருந்துதான் பண்பாட்டுக் கூறுகள் புறப்பட்டு வருகின்றன. ஆகையால் நம் பிள்ளைகள் அவர்கள் பெறும் பிள்ளைகள் தமிழ்நாட்டின் தொடர்பே இல்லாமல், தமிழ் மொழியின் ஒரு வார்த்தை கூடத் தெரியாமல் இருந்தால் அது மிகப்பெரிய இழப்பு என்பதைப் புரிந்துகொள்ளவேண்டிய காலசூழ்நிலையில் நாம் இருக்கிறோம் என உண்மையை விவரித்தார்.

சரி அதை ஏன் இழப்பு என்கிறோம் என அதற்கும் அனைவர்க்கும் புரியும்படி விளக்கம் அளித்தார். உலகத்தில் வழக்கத்தில் இருக்கும் மொழிகள் ஏழாயிரம் ஆகும். அதில் சமீபத்திய கணக்கெடுப்பில் 50 விழுக்காடு மொழிகள் இன்னும் நூறு ஆண்டுகளில் இருக்கவே இருக்காது என்று சொல்கிறார்கள்.இதை எப்படி கணக்கெடுத்தார்கள் என்று பார்த்தால், உலகத்தில் 3 வயது குழந்தை முதல் 15 வயதுக்குட்பட்ட குழந்தைகள், அவர்களின் தாய்மொழியை எவ்வளவு பேர் கற்கின்றனர். அதாவது எழுதவும், படிக்கவும், பேசவும் எத்தனை பேருக்குத் தெரியும் என கணக்கெடுக்கின்றனர். இந்தக் கணக்கெடுப்பில் 20 விழுக்காட்டிற்கு குறைவாக இருந்தால் அந்த மொழி இன்னும் 100 வருடத்தில் அழிந்துவிடும் எனக் கூறுகின்றனர். அந்த வரிசையில் நம் தமிழ் மொழி இல்லை என்பது மகிழ்ச்சியான செய்தி.

ஏன் நம் மொழி அந்த வரிசையில் இல்லையென்றால் அதற்கு மூன்று காரணங்கள்தான் என வரிசைப்படுத்தி உணர்த்தினார் .
முதல் காரணம் - இணையம், நிறைய வாசல்களைத் திறந்து வைத்திருக்கிறது. புதிய எழுத்தாளர்களை உருவாக்கியிருக்கிறது.

இரண்டாவது காரணம் - அயல்நாடுகளில் வாழ்கின்ற தமிழர்கள், தமிழ்ச்சங்கம், தமிழ்ப்பள்ளி நடத்துவதும், தன்னார்வல ஆசிரியர்களும் முக்கியக் காரணம் ஆகும்.

மூன்றாவது காரணம் - ஈழத்தமிழர்கள் , அவர்களுக்கு ஏற்பட்ட பிரச்சினைகளுக்குப் பிறகு புலம்பெயர்ந்து பல நாடுகளில் நம் மொழி வளரக் காரணம் ஆவர்.

இந்தக் காரணங்களினாலும், மேலும் சில காரணங்களினாலும் தமிழ் மொழி அந்த வரிசையில் இல்லை எனப் பெருமிதத்தோடு பேசினார்.

மேலும் நம் நிகழினி பத்திரிகை பெயர் மிக அழகான தமிழ்ப் பெயர் என்றும் இரண்டு விழாவும் ஒருசேர நடப்பதில் இரட்டிப்பு மகிழ்ச்சி எனவும் மொழி வளர வாசிப்பு என்பது மிக மிக அவசியம் என அருமையான அவர் குரலில் பேச தமிழ், தேன் போல் இனித்து இரு விழிகளும் அகலாமல் கேட்டுக்கொண்டிருந்த மக்களிடையே தனது தமிழ்ப் புன்னகையோடு புரியவைத்த முயற்சியில் வெற்றிபெற்றவராய் உரையை முடித்தார்.

# இன்சொல்லும் இறைவழிபாடும்.

**திருமதி. ஞானப்பூங்கோதை சுப்பிரமணியன்.**
**கௌரவ ஆலோசகர்கள் குழு**

**" கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின் . "**

ஒருவர் எவ்வளவு பெரிய கல்விமானாக இருந்தாலும் அவர் இறைவனின் திருவடிகளைத் தொழவில்லை யென்றால் அவர் கற்ற கல்வியினால் பயனேதும் இல்லை . இது திருவள்ளுவரின் திருவாக்கு .

பெரும்பாலும் நம் ஒவ்வொருவருக்கும் ஒரு மதச் சார்பு இருக்கும். எந்த மதத்தைச் சார்ந்தவருக்கும் வழிபடு கடவுள் என்று ஒன்று இருக்கும். அந்தக் கடவுளை வழிபடுவதற்குச் சடங்குகளோ சம்பிரதாயங்களோ அவசியமில்லை. இறைவனை வழிபட வேண்டும் என்றால் பெரிய கோயில்களைத் தேடிச் செல்லவேண்டும் என்றோ, அங்கு அபிடேக ஆராதனைகள் செய்தோ, பெரிய மலர் மாலைகள் சார்த்தியோ வழிபட வேண்டும் என்பதில்லை. நாம் போகிற வழியில் எங்காவது இறைவன் திருமேனியைக் காண நேர்ந்தால் அருகில் இருக்கும் மரம் செடி கொடிகளில் இருந்து சில **பச்சிலைகளைப் பறித்துத் தூவி** இறைவனை வழிபடலாம். அல்லது நாம் போகும் வழியில் ஒரு பசுமாட்டினைக் கண்டால் அது சாப்பிடத் தக்க பொருள் எதையாவது கொடுக்கலாம் . அருகில் முளைத்திருக்கும் **புல்லைச் சிறிது பிடுங்கிப் போடலாம்** . அதாவது நம்மைச் சுற்றியுள்ள உயிரினங்களிடம் அன்பு காட்டுவதும் ஒரு வழிபாடு தானே. ஏனெனில் அன்பே கடவுள் அல்லவா !

நாம் உண்ணப் போகும்போது **நம் உணவிலிருந்து ஒரு கைப்பிடி அளவு உணவை எடுத்துப் பசியோடு இருக்கும் யாருக்காவது கொடுத்துவிட்டுப் பிறகு உண்ணலாம்.** ஏனெனில் பசித்தவருக்கு நாம் கொடுக்கும் உணவே இறைவனுக்கு உரிய சிறந்த படையல் என்பது நம் நம்பிக்கை . எனவே அதுவும் ஒரு வகையான வழிபாடு தானே !

பச்சிலை தூவுதல், பசுவிற்கு வாயுறை வழங்குதல் , பசித்தவருக்கு உணவிடுதல் ஆகிய இவற்றைச் செய்வதற்குக் கூட நாம் சிறிதளவாவது பிரயத்தனப்பட வேண்டும் . இவை எல்லாவற்றையும் விட எளிமையான , எந்தப் பிரயத்தனமும் இல்லாத ஒரு வழிபாடும் ஒன்று உண்டு . அது தான் **எல்லாரிடமும் இனிமையாகப் பேசுதல்.** இன்சொல் பேசுவதனால் பேசுபவருக்கும் மகிழ்ச்சி ; கேட்பவருக்கும் மகிழ்ச்சி .

ஏனெனில் அன்பே கடவுள் அல்லவா! அன்பான உள்ளத்திலிருந்து தானே இன்சொல் வரும். ஆகவே இறைவழிபாட்டிற்கு அன்போடு இன்சொல் பேசுவதைக் காட்டிலும் எளிமையான வழி வேறு இருக்க முடியுமா ?
இதைத் தான் **திருமூலர்** தாம் பாடிய திருமந்திரத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்

**" யாவர்க்கும் ஆம்இறை வர்க்கொரு பச்சிலை**

**யாவர்க்கும் ஆம்பசு வுக்கொரு வாயுறை**

**யாவர்க்கும் ஆம்உண்ணும் போதுஒரு கைப்பிடி**

**யாவர்க்கும் ஆம்பிறர்க்கு இன்னுரை தானே ."**

**——-- " திருமூலர் எழுதிய திருமந்திரம் . "**

என்ன, நாமும் இன்சொல் பேசி இறைவனை
வழிபடுவோமா !

**திருமதி. ஞானப்பூங்கோதை சுப்பிரமணியன்.**



அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் சற்றேறக்குறைய 30 ஆண்டுகள் இளநிலை மற்றும் முதுநிலை தமிழாசிரியர் பணி செய்து ஓய்வு பெற்றவர். 1996 இல் தினகரன் பத்திரிகை, கடலூர் மாவட்டத்தில் சிறந்த தமிழாசிரியர் விருது வழங்கிச் சிறப்பித்தது.

## திரு. சுகுமாறன் மாரியப்பன்

தொல்காப்பியர் காலம்தொட்டுத் தமிழ் மொழிக்கு வாய்மொழி, தொல் மொழி, உயர் மொழி,செந்தமிழ், பைந்தமிழ்,தேன் தமிழ் முதலான பல அடைமொழிகள் இருந்தாலும் முத்தமிழ் என்ற பெயரே நம் தாய்த்தமிழ் மொழிக்குச் சிறப்பு சேர்ப்பதாய் உள்ளது. இப்படி மூவகை பாகுபாட்டோடு உள்ள மொழியை உலக மொழிகள் எதிலும்காணமுடியாது. இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் என்பதே அந்தப் பாகுபாடு.

இவற்றுள் இயற்றமிழ் கருத்துக்கு (அறிவிற்கு) விருந்தாய் அமைவது. இயற்றமிழுக்குப் பண்ணமைத்து இசையோடு பாடுதல் இசைத்தமிழ் ஆகும். இசைத்தமிழ் கருத்துக்கும் செவிக்கும் விருந்தளிப்பது. இசையோடு பாடி ஆடுதல் நாடகத் தமிழ் ஆகும். நாடகத் தமிழ் கருத்துக்கும்,செவிக்கும், கண்ணுக்கும் விருந்தளிப்பதாகும்.

**முத்தமிழ் பற்றிப் பாரதிதாசன் கவிதை:**

படிப்பும் பேச்சும் இயற்றமிழ்
பாடும் பாட்டே இசைத்தமிழ்
நடிப்பும் கூத்தும் சேர்ந்தே நாடகத் தமிழ் என்பார்கள்.

சிலப்பதிகாரம் முத்தமிழ்க் காப்பியம் என்றே சிறப்பிக்கப்படுகிறது . காப்பியத்தில் இடம்பெறும் நிகழ்ச்சிகள் சேர, சோழ, பாண்டிய (தமிழ் நாட்டின் மூன்று பகுதிகள் ) நாடுகளில் நிகழ்ந்தவை என்பதனால் மட்டுமல்ல, இயல் இசை நாடகம் என்ற முத்தமிழ்க் கூறுகளையும் அது தன்னகத்தே கொண்டிருப்பதாலும் அது முத்தமிழ்க் காப்பியம் என்று போற்றப்படுகிறது. முத்தமிழ்களுள் இயற்றமிழே இசைத்தமிழுக்கும் நாடகத் தமிழுக்கும் உயிர் போன்றதாகும். பரிபாடல் தவிர்த்த எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களும் அவற்றின் உரை நூல்களும் தற்காலத்தில் வெளிவந்துள்ள செய்யுள் மற்றும் உரைநடை நூல்களும் இயற்றமிழ் நூல்களே.

தமிழர் வாழ்வே இசை மயமானது எனலாம். ஏனெனில் தமிழர் வாழ்க்கையில் ஒவ்வொரு நிகழ்விலும் பாட்டு இடம் பெறுகிறது. குழந்தையை உண்ணச் செய்ய நிலாப் பாட்டு, உறங்கச்செய்யத் தாலாட்டுப் பாட்டு, விளையாடப் பாட்டு, வேலை செய்யும் போது தெம்மாங்குப் பாட்டு, ஊஞ்சல் பாட்டு, ஒப்பாரிப் பாட்டு என்று தமிழரின் பிறப்பு முதல் இறப்பு வரை இசை மயம் தான். பக்தி இலக்கியக் காலத்தில் திருமுறைகளும் பிரபந்தங்களும் இசையை வளர்த்து எடுத்தன.

படிக்கத் தெரியாதவர்க்கும், படிக்க நேரமில்லாதவர்க்கும் அறிவையும் இன்பத்தையும் தருவது நாடகத் தமிழ். சங்க காலத்திலும் பிற்காலச் சோழர் காலத்திலும் பீடு நடை போட்ட நாடகத் தமிழ் இடைக்காலத்தில் நலிவடைந்தது.

பிறகு 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் சங்கரதாசு சுவாமிகள், பம்மல் சம்பந்த முதலியார் போன்றோரின் முழு முயற்சியால் புத்துயிர் பெற்றது. இன்று நாடகத் தமிழின் சிறந்த நூலாக விளங்குவது பேராசிரியர் சுந்தரம்பிள்ளை எழுதிய மனோன்மணீயம் எனலாம். இன்றைய காலகட்டத்தில் நாடகத் தமிழ் திரைச் சித்திரங்களாக மிளிர்கிறது.

தமிழ்எங்கள் உயிர்என்ப தாலே ----
வெல்லும்
தரமுண்டு தமிழருக்கு இப்புவி மேலே
தமிழுண்டு தமிழ் மக்கள் உண்டு -----
இன்பத்
தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல
தொண்டு.

**----- பாவேந்தர் பாரதிதாசன்.**

**குறிஞ்சி முத்தமிழ் சங்க செய்திகள்....**

கடந்த மே மாதம் 9ம் தேதி நடைபெற்ற குறிஞ்சி முத்தமிழ் சங்கம் துவக்கவிழா மற்றும் நிகழினி இதழ் வெளியீட்டு விழாவில், நமது குறிஞ்சி முத்தமிழ் சங்கத்தின் நிறுவனர் திரு சுகுமாறன் மாரியப்பன் அவர்கள் கீழ்கண்டவாறு வரவேற்புரையாற்றினார் .

எந்த ஒரு மொழியிலும் இல்லாத ஒரு தனிச்சிறப்பு நம் தமிழ் மொழிக்கு மட்டுமே உண்டு, அது யாதெனில் இயல் , இசை , நாடகம் என்ற மூன்று கூறுகள் ஆகும் . அப்படிப்பட்ட முத்தமிழுக்கு, மலையும் மலை சார்ந்த இடமான கொலோராடோவில் , இடத்திற்கு ஏற்றாற்போல் குறிஞ்சி என பெயரிட்டு , குறிஞ்சி முத்தமிழ் சங்கம் ஆரம்பிப்பதில் பெருமையும், அப்பெயருக்கான விளக்கத்தையும் அளித்தார்.

அமெரிக்காவில் தமிழ்ச்சங்கம் முதன்முதலில் ஆரம்பித்ததும் நாம் இல்லை, கடைசியாக ஆரம்பிப்பவர்களாக நாம் இருக்கப்போவது இல்லை என்ற அருமையான கருத்தை பதிவிட்டதோடு குறிஞ்சி முத்தமிழ் சங்கத்தின் நோக்கங்களை பெருமையுடன் எடுத்துரைத்தார் .

நாமும் நம் குழந்தைகளும் தமிழை வாசிக்க வேண்டும் ,தமிழை நேசிக்க வேண்டும், தமிழை சுவாசிக்க வேண்டும் என்றும், நமது சங்கத்தின் முத்திரையிலும் இருப்பது போல நம் குழந்தைகள் தமிழில் படிக்க, எழுத மற்றும் பேச வேண்டும் என்பதை அழகாய் எடுத்துரைத்தார் .

# தனி மனித ஒழுக்கம் - Self -Discipline

## எழுத்தாளர் திருமதி. அனு அசோக்

**“ஒழுக்கம்  விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிருனும் ஓம்பப் படும்” – திருவள்ளுவர்**

உயிரை விட ஒழுக்கம் மேலானது என்கிறார் திருவள்ளுவர்

உள்ளங்கையில் உலகம் பெருமையாக தான் இருக்கிறது. ஆனால், இன்றைய நவீன உலகத்தில் உயிரை கூட பொருட்படுத்தாமல் ஒழுக்கமற்ற வாழ்கையை வாழ பெரும்பாலோனோர் துணிந்து விட்டார்கள் என்பது தான் தற்போதைய  நிலைமை.

ஒரு மனிதனின் ஒழுக்கம் எங்கிருந்து தொடங்க வேண்டும் பார்வையில்

1. பார்வையில்
2. சிந்தனையில்
3. செயலில்

இப்படி ஒழுக்கம் என்ற வரையறைக்குள் இருந்த சில செயல்கள் இன்றளவில் பேசுபொருளாக கூட இல்லாமல் கேலிப்பொருளாக மாறியிருக்கின்றது என்பதை  நம்மால் மறுக்க முடியுமா (எ. கா மதுப்பழக்கம் – மதுப்பழக்கம் உடல்நலத்திற்கு கேடு விளைவிக்கும் என்பது மாறி, ஒருவர் தனக்கு மதுப்பழக்கம் இல்லை என்பதை வெளியில் சொல்ல தயங்கும் நிலைமைக்கு நாம் வந்துவிட்டோம்)
சரி, ஒழுக்கத்தை எப்படி வரையறைக்குள் கொண்டு வருவீர்கள் ‘நமது அறிவும் அனுபவமும் கூடும்போது ஒழுக்கத்தை  பற்றிய கருத்து தெளிவாகிக்கொண்டே போகும் சிலசமயம் இன்று ஒழுக்கம் என்று அறியப்படும் ஏதேனுமொன்று வருகின்ற பிற்காலத்தில் புதிய அனுபவமும் அறிவும் வளர்ந்து புதிய தெளிவையடைந்தால் மாறவும் கூடுமே என்று பலருக்கு கேள்வி எழலாம்.

ஒரு மனிதன் வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு சுய கட்டுப்பாடு, சுய ஒழுக்கம் இவை இரண்டும் மிக முக்கியமான ஒன்று என்பது நாம் அனைவரும் அறிந்ததே ஆனால் அதை செயல் படுத்துவது தானே கடினம் என்கிறீர்களா!

மனசாட்சிக்கு பயந்து நடப்பவர்கள் சுய ஒழுக்கத்தை கடைபிடிப்பார்கள் என்பது பொதுவான கருத்து ஆனால், அந்த அளவு ஆழத்திற்கு கூட என் கருத்துக்களை நான் சொல்ல போவதில்லை இன்றளவில் சரி, தவறு, இதற்கான புரிதல்களும், விளக்கங்களும் வேறு விதமாக இருக்கும் பட்சத்தில், சுய ஒழுக்கத்தை பற்றிய என்னுடைய புரிதலை எந்த கால வரையறைக்குள்ளும் குறிப்பிடாமல் பொதுவாகவே இங்கே பகிர்ந்து கொள்கிறேன்.

1. சுய ஒழுக்கத்தை கடைபிடிக்க முதற்கட்டமாக நம்முடைய பலம், பலவீனம் இரண்டையும் நன்கு அறிந்து கொள்ள வேண்டும். அதற்கு ஆரம்பத்தில் நம்மை பற்றிய சுய ஆராய்ச்சிக்கு நேரம் செலவு செய்ய வேண்டும்.
2. இரண்டாவதாக உங்களது துறையிலோ அல்லது வாழ்க்கையிலோ உங்களுக்கு மிகவும் பிடித்த ஒரு நபரை வழிகாட்டியாக, அல்லது ஆசானாக ஏற்றுக்கொண்டு அவரை பின்பற்ற வேண்டும்.
3. மூன்றாவது உங்களது இலக்குகளை வகுத்துக்கொண்டு அதை அடைய முயற்சி மட்டுமல்லாது தினமும் விடாமுயற்சி செய்துகொண்டே இருக்கவேண்டும்.
4. வாழ்க்கையில் சிலசில தவறுகள் தவிர்க்க முடியாதவை அதனால், நீங்கள் அறியாமலோ, தெரியாமலே செய்யும் தவறுகளை மன்னித்து கடந்து செல்ல முயற்சி செய்ய வேண்டும். சரியோ, தவறோ நன்மையோ , தீமையோ எதிலும் தேக்க நிலை இருக்க கூடாது.
5. உங்களை கட்டுப்படுத்தும் எந்த ஒரு பழக்கத்தையும் உங்களிடம் இருந்து விளக்கி வைத்து கொள்வது நல்லது.

6.மேலே குறிப்பிட்டுள்ள சில வழிமுறைகளை கடைபிடிக்கும் போதே உடலிலும், மனதிலும் நேர்மறையான மாற்றத்தை உணர முடியும். அப்படி உணர்ந்தால் உங்கள் மனமும், உடலும் உங்கள் கட்டுப்பாட்டிற்குள் வந்துவிட்டதை உறுதி செய்து கொள்ளலாம்.

7.திட்டமிடல் என்பது மிகவும் சிறப்பான ஒன்று ஆனால், மாற்றுத்திட்டம் என்பது அதையும் விட சிறப்பானது. ஒரு வேளையில் நூறுசதவீதம் அர்பணிப்பு, விடாமுயற்சி இவ்வளுவும் செய்தும் உங்கள் திட்டம் படு தோல்வியடைகிறதா அது இயல்பு. ஆனால், மாற்றுத்திட்டம் உங்களிடம் இருந்தால் உங்கள் ஏமாற்றத்தின் வலியும், வேதனையும் குறைவாகவே இருக்கும்.

8.உணர்ச்சிகளை கட்டுப்படுத்துவது என்பது எல்லோருக்கும் சவாலான ஒன்று. பொதுவாக Thinking Mind, Emotional Mind இரண்டும் ஒரே சமயத்தில் வேலை செய்யாது என்பது நாம் அறிந்ததே. ஆனால், உணர்ச்சி பிழம்மாக இருக்கும் பல நேரங்களில் பிரச்சனைகளுக்கு தீர்வுகாண நினைப்போம். பத்து பேர் கோபமாக இருக்கும் இடத்தில் உங்கள் ஒருவரால் சாந்தமாகவும் தெளிவாகவும் சிந்திக்க முடிகிறதா? நீங்கள் உணர்ச்சிகளை கட்டுபடுத்தும் கலையை கற்றுக்கொண்டு விட்டீர்கள்.

9.மேடு,பள்ளம் நிறைந்தது தான் வாழ்க்கை சந்தோசமான காலகட்டத்தை மகிழ்ச்சியுடன் அனுபவிப்பது போல கஷ்டமான காலகட்டங்களில் கூட நேர்மறையான சிந்தனையுடன் இருக்க பழகிக்கொள்ளுங்கள். கஷ்டகாலங்களில் தான் அனுபவ அறிவை வளர்த்துக்கொள்ள முடியும்.

10.இவையனைத்துடன் நம் உடலையும் மனதையும்  உறுதியாக வைத்திருக்கும்  உடற்பயிற்சி, தியானத்தை அன்றா வாழ்க்கையில் கடைபிடித்தால் தனி மனித ஒழுக்கம் அனைவருக்கும் சாத்தியப்படும்.

## என் விடுகதைக்கு விடை கண்டுபிடியுங்கள்?

**செல்வி. யாழிசை சந்திரா ஸ்ரீதர்**

1 . கண்ணால் பார்க்கலாம் கையால் பிடிக்க முடியாது? வெயிலில் நடந்தால் கூடவே வரும் ? அது என்ன?

2 . எவர் கையிலும் சிக்காத கல் எங்கும் விற்காத கல் அது என்ன?

3 . சட்டையை கழட்டினால் சத்துணவு அது என்ன?

4 . ஆழக்குழி தோண்டி அதிலே ஒரு முட்டையிட்டு அண்ணாந்து பார்த்தால் தொண்ணூறு முட்டை அது என்ன?

5 . உடம்பில்லா ஒருவன் பத்து சட்டை அணிந்திருப்பான் ? உரிக்க உரிக்க அழுகை வரவழைப்பான்?

**விடுகதை விடை அடுத்த பக்கத்தில்**









மண்ணுக்கு மழைதான் உரம்
மழைக்கு மரம்தான் வரம்
மரம் வளர்க்க தேவை நம் கரம்
மரம் வளர்ப்போம் !
மழை பெறுவோம் !

**செல்வன். ஹர்ஷிவ் எல்லப்பா சந்திரா ஸ்ரீதர்**

## விடுகதை விடை :

1 . நிழல்
2 . விக்கல்
3 . வாழைப்பழம்
4 . தேங்காய்
5 . வெங்காயம்

திருமதி. ரேவதி சுகுமாறன்

**ஆசிர்வாதம் மூலம் அனைத்து செல்வங்களையும் பெறலாம்** ..!!

வீட்ல உள்ள பெரியவங்க கால்ல விழுந்து நீங்க ஆசீர்வாதம் வாங்கறது உண்டா..?

சில வீடுகள்ல பொறந்த நாள், கல்யாண நாள், வெளியூர், வெளிநாடு போறப்ப, தீபாவளி அன்னிக்கு புது புடவை கட்டினப்ப இது மாதிரி சந்தர்ப்பங்கள்ல பெரியவங்க கால்ல விழுந்து ஆசீர்வாதம் வாங்கறது உண்டு.
பெரியவங்க - வயசானவங்க  கால்ல விழுந்து ஆசி பெற்றால்
நம்ம சக்தி அதிகப்படும்னு ஆராய்ச்சியாளர்கள் சொல்றாங்க.

ஆசிர்வாதம் எனும் மிகப்பெரிய சக்தி நமக்கு பெரும் பலத்தை கொடுக்கிறது. அசிர்வாதம் பெறுவது மட்டுமல்ல.. ஆசிர்வாதம் செய்வதும் கூட உங்களுக்கு சக்தியை கொடுக்கும்..

நல்ல வார்த்தைகளை தேர்ந்தெடுத்து சொல்வதில்தான் விஷயம் இருக்கிறது.

100 வயது பெரியவரிடம் ஆசி வாங்னேன்..அவர் தீர்க்காயுசா இருப்பா என்றார். ரெம்பவே சந்தோஷமா இருந்துச்சு ..!

ஐயா, எவ்வளவு நாளா இந்த வார்த்தைகளை பயன்படுத்தி
ஆசி பண்றீங்க என்றேன்.அது ஒரு 30 - 40 வருசமா அப்படித்தான் ஆசி பண்றேன் என்றார்.அவரது தீர்க்காயுளுக்கும் இதுவும் ஒரு காரணமாக இருக்கும்..!!.

சிலர் காலில் விழுந்தால் இருக்கட்டும் எந்திரிங்க என்பார்கள்.அய்யோ என் கால்ல போய் விழுந்துட்டு என பதறுவர். இதெல்லாம் தவறு. ஆசி வழங்காமல் புறக்கணித்தல் பாவம் என்கிறது சாஸ்திரம்.
புது மணமக்கள் காலில் விழுந்தால் தீர்க்காயுஸ்மான் பவ என ஆணுக்கும், தீர்க்க சுமங்கலிமான் பவ என பெண்ணுக்கும் ஆசி வழங்கலாம் ...

வயதானவர்கள், சகல தோசங்களும் நீங்கப்பெற்று சகல செல்வங்களும் பெற்று, குடும்ப ஒற்றுமையுடன், நீண்ட ஆயுளுடன் வாழுங்க -- "வாழ்க வளமுடன்" -- என்று ஆசிர்வதிக்கலாம் ...

தமிழில் அழகான வார்த்தைகளுக்கு பஞ்சமில்லை

உங்களுக்கு என்னென்ன தேவையோ அதை பிறருக்கு ஆசியாக கொடுங்கள். அவர்களுக்கும் அவை கிடைக்கும் உங்களுக்கும் அவை வந்து சேரும்..இது பிரபஞ்ச விதி .

"வாழ்க வளமுடன்" என்பது ஒரு மந்திரச் சொல்லாகும்..!
இப்படி வாழ்த்துவதால் பிரபஞ்சசக்தி அந்த வார்த்தைகளை உங்களுக்கும் உங்களை சார்ந்தோரையும் வளமாக வாழ வைக்கிறது என்பது பலரது அனுபவ உண்மை..

நாம் ஏன் காலில் விழுகிறோம் என்பதற்கு அறிவியல் ரீதியான காரணம் உண்டு. ஆய்வின்படி மனிதனின் காலில்தான் சக்தி ஓட்டம் அதிகமாக இருக்கிறது.

ஒரு ஞானியையோ அல்லது மகானையோ பார்க்கும் போது - வாய்ப்பு கிடைத்தால் அவர்களின் காலைத் தொட்டு ஆசி பெறும் போது அவர்களின் சக்தி நமக்கும் கிடைக்கிறது.

காலை தொடுதலின் மூலம் இந்த சக்தி பரிமாற்றம் நடக்கிறது.மேலும் சொல்லும் வார்த்தைகளில் அதிக சக்தி இருக்கிறது.

மனப்பூர்வமாக ஒருவர் ஆசி வழங்கும்போது அதன் சக்தியை அளவிட முடியாதது.பல பாவங்களையும், தோஷங்களையும் கூட அது போக்குகிறது.

பெரியோர் காலில் விழுந்து ஆசி பெறுவதை பழக்கப் படுத்திக் கொள்ளுங்கள் ..!

உங்கள் சக்தியை அதிகப்படுத்திக் கொள்ளுங்கள்.

*வாழ்க வளமுடன்*

## கவிஞர் கண்ணதாசனின் சிந்தனைகள்



ஞானத்திற்கும் ஆணவத்திற்கும் ஒரு நூலிழை தான் வித்தியாசம்.
'நம்மிடம் ஏதுமில்லை' என்று நினைப்பது ஞானம்.
'நம்மைத்தவிர ஏதுமில்லை' என நினைப்பது ஆணவம்.

## செல்வன். ஜெகன் அருண்பிரசாத்



எழுத்தாளர் திருமதி. அனு அசோக்

## ஜெயம் :1

சற்றே பழமையான அந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு முன்னால் வாகனம் நிறுத்தப்பட்டதும், இடப்புற கதவை திறந்து கொண்டு இறங்கி நின்ற இந்துமதி அக்கட்டிடத்தை நிமிர்ந்து பார்த்தாள். அடிக்கடி வந்து போகும் இடம் தான் என்றாலும், ஏனோ? இன்று இங்கே வருவதற்கு மனம் ஒப்பவில்லை.

'கடமையை தட்டிக்கழிக்க முடியாமல் இவ்வளவு தூரம் வந்தாகிவிட்டது.இதற்கு மேல் என்ன தயக்கம்? ஒதுக்குவதோ, ஓடுவதோ அவளது குணம் இல்லையே!' இன்னொரு மனம் சொல்ல, அதுவரை முகத்தில் மெலிதாக படர்ந்திருந்த கசந்த பாவத்திற்கு விடைகொடுத்து, பார்வையை ஓட்டுனரின்
புறமாக திருப்பியவள்... "சுப்பையா! மீட்டிங் எப்போ முடியும்னு தெரியாது?

நீங்க சாப்பிட்டு வந்து வெயிட் பண்ணுங்க..." குரல் கட்டளையாக ஒலித்தாலும், வார்த்தைகளில் காரோட்டியின் வயதை குறித்த அக்கறையே தெரிந்தது.

டிரையரில் உலர்த்தி கொண்டையிடப் பட்டிருந்த கரிய கூந்தலையும், பிறை நெற்றியையும் மறைத்திருந்த காவல்துறை தொப்பி... அதை தாண்டி பாதி மட்டுமே தெரியும் ஒப்பனை இல்லாத அழகும், கம்பீரமும் கலந்த வசீகரமுகம்... இருக்கிறதா? இல்லையா? என்று கண்டறிய முடியாமல் ஒளியை மட்டும் பாய்ச்சும் சிறிய கல் தோடு... சாயம் பூசப்படாத ரோஜா இதழ்கள்
புன்னகை சிந்தினால் மோனோலிசா. ஆனால் அவை புன்னகைப்பது தான் அரிது!

மொத்தத்தில் அவளது முழு சௌந்தர்யத்தையும் ஒளித்து வைத்திருக்கும் மிடுக்கான காக்கி உடுப்பிற்கு ஏற்ப சுறுசுறுப்பான நடையுடன் கட்டிடத்தினுள்ளே நுழைந்த இந்து, அங்கிருந்த ஊழியர்கள் செய்த மரியாதையை ஒரு தலையசைப்புடன் ஏற்றுக் கொண்டவள்... முதுகிற்குப்பின்னால் அவர்கள் கிசுகிசுப்பதைக் கண்டும் காணாதது போல் மின்தூக்கியை நோக்கிச் சென்றாள். சில மணித்துளிகள் காத்திருப்பிற்கு பிறகு மின்தூக்கி பயணிக்க, இரண்டாம் தளத்தில் இரு ஆண்கள் லிஃப்ட்டிற்குள் வந்தனர்.

அதில் ஒருவன் இந்துவைப் பார்த்ததும் “குட் மோர்னிங் மேடம்...!” பணிவாகக் கூற, அவனிடம் கவனத்தை திருப்பியவள்... நீட்டாக டக்கின் செய்த முழுக்கைச் சட்டை, நெடுநெடுவென்று உயரம், கௌரவம் அளிக்கும் தோற்றத்துடன் அவனுக்கு அருகில் நின்றிருந்த மற்றவனை சிறிதும் சட்டை செய்யாமல்... “என்னய்யா வெங்கட்! இந்த டைம்ல ஸ்டேஷன்ல இல்லாம இங்க சுத்திக்கிட்டு இருக்க...? புதுசா வந்த கலக்டருக்கு நல்லா சோப்பு போடுறியாமே? நீ தான் அவருக்கு வலது கைன்னு கமிஷனர் ஆபீஸ் முழுக்க பேச்சா இருக்கு...!” அலட்சியமும், அமர்த்தலுமாக வெளிப்பட்ட
வார்த்தைகளில் திடுக்கிட்ட வெங்கட், பார்வையை உடன் வந்தவனின் புறமாக செலுத்திவிட்டு இந்துவிடம் ஏதோ பேச துவங்கும் முன்னே இடை புகுந்தவள்...

“பதவிக்கு வந்த ஒருவாரத்துல ஆர்டர்ஸ் எல்லாம் மாத்தி இன்கம் டாக்ஸ், ரெவன்யூ, கிரைம் பிராஞ்சுன்னு எல்லா டிப்பார்ட்மெண்ட்டையும் கலங்கடிச்சா சிட்டியையே கைக்குள்ள கொண்டு வந்திடலாம்னு நினைப்பா அவருக்கு...? புது தொடப்பம் வீட்டை நல்லாத்தான் பெருக்கும்... போகப்போக தானே தெரியும் புது கலெக்டர் என்னத்த கிழிக்க போறாருன்னு...” அதீத எரிச்சலுடன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே

அவள் செல்ல வேண்டிய நான்காம் தளம் வந்திருக்கவும்... வெளியேற போனவள், ஒரு நொடி தேங்கி நின்று “அந்த சூர்யப்பிரகாஷ்க்கு ரொம்ப விசுவாசமா இருக்கேன்னு கேள்விப் பட்டேன்... உன் விசுவாசத்தை எந்த அளவுக்கு போய் காட்டினாலும் ஐ டோன்ட் கேர்...” கிண்டலாகவே கூறிவிட்டு செல்ல, வார்த்தையற்ற பார்வை பரிமாற்றம் செய்து கொண்ட ஆண்கள் இருவரும் அவளுக்கு எதிர்ப்புறமாக சென்றனர்.

அங்கிருந்து சந்திக்க வந்தவரின் அலுவலக அறைக்கு சென்றவள்... வாயிலில் அமர்ந்திருந்தவனிடம் “செல்வம்! கமிஷனர் வந்தாச்சா...?” கேட்க “வந்துட்டாருங்க மேடம்! பக்கத்து ஏரியாவில் இருக்கிற ஸ்லம் ஜனங்க எல்லாம் வந்திருக்காங்க... கலெக்டர் ஐயாவும், கமிஷனர் ஐயாவும் அவங்களை பார்க்கத்தான் கீழ போனாங்க... இப்போ வந்துருவாங்க... நீங்க வந்ததும் ஐயா உங்களை உள்ளே வெயிட் பண்ண சொன்னாங்க...” எழுந்து நின்று பணிவும், குழைவுமாக கூறினான்.

அடுத்ததா ஸ்லம்மா? அரசியல்வாதிங்க தோத்தாங்க போ!’ செல்வம் கூறியதை கேட்டு இதழ்களில் இகழ்ச்சியான வளைவுடன் உள்ளே சென்றாள். அறைக்குள் சென்றதும் மனதில் மெல்லிய இதம் பரவியது.இருக்கையில் அமர்ந்து எதையோ எண்ணி முறுவலுடன் பார்வையை சுழல விட்டவள்… ‘சூரியப்பிரகாஷ் IAS’ என்ற பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்ட பெயர்ப்பலகையைக் கண்டதும் முகம் மாறினாள்.அப்பெயரின் உரிமையாளனுக்கும் அவளுக்கும் எந்த முன் விரோதமும் இல்லை என்றாலும், அவனது பெயரை கண்ட மாத்திரம் வெறுப்பும் பொருமலும் ஏற்படுவதை தடுக்க முடியவில்லை. பின்காலை நேரத்தில் கட்டிடத்திற்கு வெளியே காணப்பட்ட உஷ்ணம் மொத்தமும் அவளது மனதை ஆக்ரமித்துக் கொண்டது. இருக்கும் இடம் உணர்ந்து உணர்வுகளுக்கு வேலியிட்டு அடக்கினாள்.

அந்நேரம் அறையின் மற்றொரு வாயில் வழியாக இருவர் உள்ளே வருவதை கண்டு அவளது கவனம் அவர்களிடம் சென்றது. முதலில் வந்த இருவரில் ஒருவர் அவளுக்கு நன்கு பரிச்சயமானவர் என்பதால், அவருடன் சரிசமமாக பேசிக் கொண்டே வரும் மற்றவன் யார் என்ற சிந்தனையுடன் பார்த்தவளுக்கு, அவர்களை தொடர்ந்து வெங்கட்டும் அறைக்குள் நுழைவதை கண்டதும் விஷயம் விளங்கி விட்டது. ‘அவன் தான் ஆட்சியர் பொறுப்பை ஏற்றிருக்கும் புதியவன். அவளுடன் லிஃப்டில் பயணித்தவனும் அவன் தான். இருக்கையிலிருந்து சட்டென்று எழுந்தவளது கோபப் பார்வை வெங்கட்டை சுட்டெரித்தன. ‘பாவி! சமிக்ஞையாவது செய்திருக்கலாமே?”அவளது சீற்றப் விழிகள் உரைத்ததை உணர்ந்து கொண்டவன், பார்வை தர்மசங்கடத்துடன் அவளை நோக்கியது.அதற்குள் அவளை சமீபித்த காவல்துறை ஆணையர் சந்திரன் மிஸ் இந்து!

பதவியேற்பு விழா அன்னைக்கு நீங்க மினிஸ்டர் பாதுகாப்புக்கு டெல்லி போயிருந்தீங்க இல்ல… ஹி இஸ் அவர் நியூ சிட்டி கலக்டர் சூரியப்பிரகாஷ்…” அறிமுகம் செய்தவர், புதியவனிடம் திரும்பி “இவங்க டி.ஸி.பி இந்துமதி…” என்றதும். மின்தூக்கியில் பயணிக்கும் போது சூர்யாவை பெரிதாக கண்டு கொள்ளாத அவளது கண்கள் இப்பொழுது நிதானமாக அவனை அளவிட்டன.நேருக்கு நேராக தன்னை நோக்கிய இந்துவின் கண்களுக்கு பெண்களின் விழிகளுக்கு இயற்கையாகவே இருக்க வேண்டிய தயக்கமோ, சலனமோ,வெட்கச் சாயலையோ இல்லாமல் … அதற்கு பதிலாக ஒருவித உறுதியும்,கூர்மையும், அதிகாரத் தோரணையுமே அவற்றில் பளிச்சிட்டதை கண்டுவியப்புற்ற சூர்யாவும்…. தனது கண்களை அவளது கண்களுடன் இணைய விட்டு நின்று விட்டான்.

சூர்யாவின் உரமான உருவ வசீகரத்தில் சற்றே வியந்து, நேர்மையைபிரதிபலிக்கும் அவனது தோற்றத்தில் துணுக்குற்ற இந்து... அவனதுஉருவத்திலும், உடையிலும் தென்படும் மிடுக்கும், நேர்மையும் வயது வரம்பின்றி அனைவரையும் அவனிடம் சுலபமாக பணிய வைத்து விடும் என்பதை அவனை கண்ட கணத்திலே துல்லியமாக கணித்துவிட்டாள்,தற்போது அவளது பார்வையில் சற்றே எச்சரிக்கை உணர்வு வந்திருந்தது.

இப்படி சில நொடிகள் கண்களோடு கண்கள் கலந்ததால் இரண்டு மின்னல் கீற்றுகள் ஒன்றையொன்று உராயும் உணர்ச்சியே இருவருக்கும் ஏற்பட்டதில் அங்கே சில நொடிகள் மௌனம் நிலவியது.
சந்திரன் லேசாக தொண்டையைக் கனைத்ததும், தன்னை மீட்டுக் கொண்டவள்... அறிமுகப்படலத்திற்குள் சீறிப்பாய்ந்து திரும்பிய எண்ணப்போக்கின் சுவடு முகத்தில் தெரியாமல் காத்து வேண்டா வெறுப்பாக சிட்டி கலக்டருக்கு சல்யூட் செய்து மரியாதை செலுத்தினாள்.
சிறு புன்னகையுடன் அதை ஏற்றுக் கொண்டவன், இருவருக்கும் இருக்கையை கைக்காட்டிவிட்டு தானும் அமர்ந்து கொள்ள, ‘அவளை நேருக்கு நேராக பார்த்து புன்னகைத்த கண்களில் கேலி மறைந்திருந்ததோ?
உள்ளுக்குள் கனன்ற எரிச்சலை வெளிக் காட்டிக் கொள்ளாமல் இந்துவும் அமைதியாகவே அமர்ந்தாள்.

உயர் அதிகாரிகள் மூவரும் உரையாடுவதற்கு ஆயத்தமாக இருப்பதை கண்ட வெங்கட், கதவை அடைத்து விட்டு,அங்கிருந்தபடியே அவர்களை கவனிக்க ஆரம்பித்தான்.

‘ஏதோ பேச வேண்டும் என்று வரவழைத்துவிட்டு இப்படி அமைதியாக இருந்தால், என்ன அர்த்தம்? எதிரே இருந்தவனின் பார்வை தன்னை அணுஅணுவாக அளவிடுவதை கண்டவள், பொறுமை... ‘இப்பொழுதே பறக்கவா? இல்லை இன்னும் சற்று நேரம் சென்று பறக்கவா?’ என்று சண்டித்தனம் செய்ததில், எரிச்சல் மேலிட “என்ன? விஷயமா வர சொன்னீங்க சார்...?” சூர்யாவிடமே நேரடியாக கேட்டாள்.அவளது குரலில் தென்பட்ட எரிச்சலை உணர்ந்தாலும், அதில் பாதிப்பு அடையாதவனாக அவளையே மௌனமாகப் பார்த்திருந்தவன், “அதை பற்றி உங்க கமிஷனரே சொல்லுவார்...” உணர்ச்சிகளை வெளிக்காட்டாத குரலில் கூற, அவனது பாவனையிலிருந்து எதையும் கணிக்க முடியாத ஆத்திரத்துடன் காவல்துறை ஆணையரின் புறமாக திரும்பினாள்,‘இந்து! ரெண்டுமாசத்துக்கு முன்னால கைலாஷ் கன்சர்ன் சேர்மனுக்கு நடந்த ஆக்ஸிடென்ட் பற்றி உங்களுக்கு தெரியும் இல்லையா...?” வினவியதும்...

சற்றே சிந்தித்தவள், “எஸ் சார்! மிஸஸ் ஸ்ரீஷா சரண்தானே கைலாஷ் கன்செர்ன் சேர்மேன், அவங்க கொடைக்கானல்ல நடந்த பிஸ்னெஸ் மீட்டிங்கிற்காக போயிருந்த போது நடந்த ஆக்ஸிடென்ட்... அந்த கேஸ் ஏ.ஸி.பி செல்லப்பா தான் டீல் பண்ணாரு... ஆனா, அது ஆக்ஸிடென்ட்ன்னு கன்பாஃர்ம் ஆனதும் கேஸை கிளோஸ் பண்ணியாச்சே...” இந்த விசாரணையே அவசியமற்றது என்ற ரீதியில் அவளது பதிலிறுக்க...
“எஸ் இந்து! ஆனா, அது ஆக்ஸிடென்ட்டா இல்லாம மெர்டரா இருக்குமோன்னு இப்போ டவுட் வந்திருக்கு...”சந்திரன் சொன்னதும்,
“டவுட்டா? யாருக்கு? நம்ம டிப்பார்ட்மென்ட்டுக்கா? அவரது விளக்கத்தில் திருப்தியின்றி மேலும் துருவினாள்.

“நோ, ஸ்ரீஷாவோட ப்ரதருக்கு...” வார்த்தைகளில் அழுத்தம் கொடுத்து அவர் நிறுத்த...
“பாதிக்கப்பட்டவங்களுக்கு இந்த மாதிரி டவுட்ஸ் வருவது ஒண்ணும் புதுசு இல்லையே சார்... அதை வைத்து நம்ம டிப்பார்ட்மென்ட் ஆளுங்களை சந்தேகப்படுறது எந்த விதத்தில் நியாயம் சொல்லுங்க? ஸ்ரீஷாக்கு நடந்தது விபத்துங்கிறதுக்கு ஸ்ட்ரோங் எவிடென்ஸ் நம்ம கிட்ட இருக்கும் போது? ஒய் ஷுட் வீ கேர் அபௌட் திஸ்... அதுவும் இல்லாம வலுவான காரணம் இல்லாம நாம இந்த கேஸை திரும்பவும் இன்வெஸ்டிக்கேட் பண்றது யூஸ்லெஸ்...” எண்ணத்திலிருந்த பரிகசிப்பு குரலில் வெளிப்பட அவள் கூறி முடிக்க...
“காரணம் இருக்கு இந்து...! யூ நோ வாட்? இறந்து போன ஸ்ரீஷா வேற யாரும் இல்லை மிஸ்டர் சூர்யப்பிரகாஷோட யங்கர் சிஸ்டர்...” சொன்னதும், அவளது பார்வை சட்டென்று சூர்யாவிடம் சென்றது.

புது கலக்டரின் சிபாரிசில் உப்பு சப்பில்லாத வழக்கை தன் தலையில் கட்டும்
முயற்சி நடக்கிறதோ? என்ற எண்ணத்திலே பேசிக் கொண்டிருந்தவளுக்கு இந்தத் தகவல் முற்றிலும் புதிது. உணர்வு வயப்படலாம் இறுகிப் போய் அவளையே பார்த்திருந்தவன், விழிகளை கடந்து சென்ற துளியளவு வேதனை அவளை பாதித்ததோ? இல்லையோ?
இந்த விஷயத்தில் கேலியாக எதுவும் எண்ணத் தோன்றவில்லை என்றாலும்,

‘உண்மையாகவே தங்கையின் இழப்பை குறித்த சந்தேகமாக இருக்குமா? இல்லை தங்கைக்கு ஏற்பட்ட விபத்தை தன்னுடைய பதவிக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ளும் தந்திரம் இதில் ஒளிந்திருக்கிறதா?’ கேள்விப்புலன் அவளை யோசிக்க வைத்தது. எதைப்பற்றியோ கணக்கிடும் முகபாவத்துடனே, “ஓகே சார்! என்னை விட எக்ஸ்பீரியன்ஸ்ட் சீனியர் ஆபீசர்ஸ் எல்லாம் இருக்கும் போது, எதனால இந்த கேஸை என்னை ஹேண்டில் பண்ண சொல்றீங்கன்னு நான் தெரிஞ்சிக்கலாமா? எண்ணம் தந்த குழப்பமும், போலீஸ் மூளையில் உதித்த எச்சரிக்கையுமாக விசாரனையுடன் கேள்வி எழுப்பினாள்.

இந்தக் கேள்வியை அவளிடமிருந்து எதிர்ப்பார்த்திருந்ததை போல புன்னகைத்தவர், “நீங்க தான் இந்த கேஸை நடத்தனும்கிறது மிஸ்டர் சூர்யா ஓட தனிப்பட்ட விருப்பம்.”

மொழிந்தது தான் தாமதம், புதிர் அவிழ்ந்ததில் இந்துவிற்கு அனைத்தும் பட்டவர்த்தனமாக விளங்கி விட்டது. “வெங்கட் கூட சேர்த்து முரளி, ஜான் இவங்க ரெண்டு பேரும் உங்களுக்கு கீழ இந்த டீம்ல வொர்க் பண்ண போறாங்க... எவ்ளோ சீக்கிரம் முடியுமோ அவ்ளோ சீக்கிரம் வந்து சார்ஜ் எடுத்துக்கோங்க” தொடர்ந்து சொல்லிக் கொண்டே வந்தவர், வாக்கியத்தை முடிக்கும் முன்பாக குறுக்கிட்டவள்...
“சார் உங்களுக்கு தெரியாதது எதுவும் இல்லை.... மிஸ்டர் சூர்யப்பிரகாஷ், போட்ட நியூ ஆர்டர்ஸ் உங்க பார்வைக்கு வரமாலும் இருந்திருக்காது. நான் தான் அவரை பற்றி ரொம்ப குறைவா எடை போட்டுட்டேன்... இப்போ தான் புரியுது அவர் சிட்டியை மட்டும் கண்ட்ரோல்ல கொண்டு வரணும்னு நினைக்கலை.. நம்ம டோட்டல் டிப்பார்ட்மெண்ட்டையும் கண்ட்ரோல்ல கொண்டுவர நினைக்கிறாருன்னு” வார்த்தைகள் அவளிடமிருந்து நெருப்பு பொறிகளாக தெரிந்தன.
‘சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் இந்தப்பெண் எதைப்பற்றி பேசுகிறாள்?’ என்பது போல் புரியாமல் பார்த்திருந்த சந்திரனின் முகம் சட்டென்று மாறிவிட்டது. “மிஸ் இந்து! மைண்ட் யுவர் டங்... ஒரு சிட்டி கலக்டரை பத்தி என் முன்னாலையே தரக்குறைவா பேசுற ரைட்ஸை யாரு உங்களுக்கு கொடுத்தது...? ஐ வான் யூ... உங்க சுப்பீரியர் ஆபீசர்ஸ் முன்னால பேசிட்டு

இருக்கீங்கங்கிறதை நியாபகத்துல வச்சிக்கிட்டு பேசுங்க...” கனமான குரலில் கடுமையாக பேசியதும் இந்துவின் முகம் சுண்டி, இருண்டு விட்டது. அதற்கும் மேலாக அவள் பேசியதில் சிறு வாட்டத்தைக் கூட முகத்தில் காட்டாமல் சலனமற்று அமர்ந்திருந்தவனை பார்க்கப் பார்க்க கோபம் தான் அதிகரித்தது.

சூர்யாவின் முன்னால் உயரதிகாரியிடம் பேச்சு வாங்க நேர்ந்ததில் தனது தன்மானம் சீண்டப்பட்டதாக எண்ணினாலும் புயலை அடக்கிய சீற்றத்துடன் கம்பீரமாகவே எழுந்து நின்றவள், “ஆல்ரெடி கமிஷனரே அவர் கண்ட்ரோல்ல தான் இருக்காருங்கிறதை தான் சார் மறந்துட்டேன்.. ஆனா, இந்த இந்துமதி ஜனார்த்தனனை யாரும் எப்பவும் கண்ட்ரோல்ல கொண்டு வரவோ, பணியவைக்கவோ முடியாது... சாரி சார்! நான் இந்த கேஸை எடுத்துக்கிறதா இல்லை... ஐ டேக் லீவ்” வரவழைத்துக் கொண்ட நிதானத்துடன் கூறிவிட்டு...நடக்க ஆரம்பித்தாள்.

இந்து! வெயிட் வெயிட்...” சந்திரன் கூப்பிடக் கூப்பிட காதில் விழாத தோரணையில் விரைப்புடன் வெளியேறி விட்டாள்... அவள் சென்றதும், “ஊப்ஸ்...” உஷ்ண மூச்சை வெளியிட்டபடி இருக்கையில் அமர்ந்தவர், “சாரி சூர்யா! நான் இப்படி நடக்கும்னு எதிர்ப்பார்களை...”அவரது கனத்த குரல் உள்ளே போய்விட்டதிலேயே உண்மையான வருத்தம் தெரிந்தது.

மௌனமாக டேபிள் வெயிட்டை உருட்டிக் கொண்டிருந்தவன், அவரை நிமிர்ந்துப் பார்த்தான்... பதிலேதும் கூறாமல் எழுந்து சென்று ஜன்னலுக்கு அருகே நின்றவனது எண்ணத்தில் அடுத்த சில நொடிகள் தங்கையின் நினைவலைகள் முழு வீரியத்துடன் எழுச்சி பெற்றது. அவ்வளவு நேரமாக சிறையிட்டு மறைத்திருந்த சோகமும், இழப்பும் வேதனையை மூட்டியது.

எண்ணிலடங்கா நற்குணங்களுடன் அழகும், குறும்பும் நிறைந் அற்புதமான பெண் அவனுடையை தங்கை ஸ்ரீஷா, இயல்பிலே அவளுக்கிருக்கும் பிடிவாத குணம் தான் சூர்யாவின் விருப்பமின்மையும் பொருட்படுத்தாமல் கல்லூரியில் அவளுடன் படித்த ராம்சரணை மணந்துக்கொள்ள காரணம் என்றாலும், தனது சொந்த முயற்சியில் சென்னையில் கார்ப்பொரேட் கம்பனி ஒன்றை துவங்கி திறம்பட நடத்திக் கொண்டிருந்தாள். தொழில் தொடங்கிய குறுகிய காலத்திலே பலர் திரும்பி பார்க்கும் அளவிற்கு சாதனைகள் புரிந்து இளம் தொழிலதிபர் பட்டியலில் முதன்மை இடத்தையும் பிடித்திருந்தாள்.

அவளது திருமணத்தை தொடர்ந்து அண்ணனுக்கும், தங்கைக்கும் அவ்வப்போது சிற்சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு கொண்டிருந்தாலும், ஆறு வருடங்களுக்கும் மேலாக கணவன், குழந்தை என்று வாழ்க்கையின் ஒவ்வொரு அங்கத்தையும் ரசித்து வாழ்ந்து கொண்டிருந்தவளுக்கு ஏன் இப்படி ஒரு அகோர மரணம் நேர்ந்தது என்பதை குறித்த வேதனையும், தேடலும் தான் அவனை பாட்னாவிலிருந்து சென்னைக்கு இடம்பெயரச் செய்திருந்தது.

‘தங்கையின் திருமணத்திற்கு பிறகு அவளை விட்டு ஒதுங்கி இருந்தது தவறோ என்று சமீப காலமாக மனதை அரித்துக்கொண்டிருந்த குற்றவுணர்வை இந்துவின் பேச்சு குத்தி, கிழித்து, கிளறி விட்டிருந்தது. அந்த அவஸ்தையின் நெருடலை தாங்க முடியாமல் மனம் தவியாய் தவித்தது.

‘என்னுடைய பிடிவாதம் தானே என் தங்கையை என்னிடமிருந்து விளக்கி வைத்தது...’ மனக்கிலேசத்துக்கு அணைகட்ட முயன்று தோற்றுப்போனவன் கண்களுக்குள் ஏதோ கரித்தது. கட்டுப்பாட்டை மீறி விழிகளில் துளிர்த்த நீரை உள்ளிழுத்து நிதானமாக சந்திரனின் புறமாக திரும்பினான்.“மிஸ். இந்துமதி சொல்கிற மாதிரி என் சிஸ்டர் ஸ்ரீக்கு நடந்தது உண்மையாவே விபத்தா கூட இருக்கலாம் கமிஷனர் சார்...! ஆதாரம் எல்லாமே அப்படித்தான் சொல்லுது... ஆனால், என்னால தான் அதை ஏத்துக்க முடியலை... என் தங்கைக்கு நடந்த விபத்துல ஏதோ ஒரு மர்மம் இருக்குன்னு என்னோட இன்ட்டுஷன் சொல்லிக்கிட்டே இருக்கு.

விபத்துக்கு முக்கியமான காரணமா ட்ரன்க் அண்ட் டிரைவ்ன்னு சொல்றாங்க... பிஸ்னஸ் மீட் முடிஞ்சதும் பார்ட்டியில் அவள் லிக்கர் எடுத்தான்னு ரெண்டு மூணு பேர் வாக்குமூலம் வேற குடுத்திருக்காங்க... ஆனால், ஸ்ரீக்கு டிரிங்கிங் ஹேபிட் கிடையவே கிடையாது என்னால உறுதியா சொல்ல முடியும். அந்த விஷயம் தான் என் மனசை உறுத்திக்கிட்டே இருக்கு... நான் சென்னைக்கு ட்ரான்ஸ்பர் வாங்கிட்டு வந்ததுக்கு ரீசனே இந்த கேஸை பற்றிய விசாரனை என்னோட பார்வையில நடக்கணும்னு தான்... என் தங்கைக்கு என்ன நடந்ததுன்னு நான் தெரிஞ்சிகிட்டே ஆகணும்...” ஆற்றாமையும், ஆவேசமுமாக சொல்லிவிட்டு மீண்டும் இருக்கையில் வந்து அமர்ந்தவன் முகம் சற்றே இயல்பிற்கு திரும்பியிருந்தது.

“ஐ கேன் அண்டர்ஸ்டாண்ட் யுவர் பீலிங்க்ஸ் சூர்யா... உங்க சிஸ்டர் டெத்துக்கான உண்மையான காரணத்தை சீக்கிரமாகவே கண்டுப் பிடிச்சிடலாம். பட், இந்துவை எனக்கு சின்ன வயசுல இருந்தே நல்லாத் தெரியும்.

அவள் இப்படியெல்லாம் நடந்துக்கிற பெண்ணே கிடையாது... இன்னைக்கு தான் உங்களை மீட் பண்ணிருக்கா அதுக்குள்ள உங்க மேல அவளுக்கு ஏன் இவ்ளோ வெறுப்புன்னு தான் என்னால புரிஞ்சிக்கவே முடியலை...” தெளியாத மனதுடன் சொன்னவரிடம்...
“என்னால புரிஞ்சிக்க முடியுது... என்னை பார்க்காமலே என் மேல அவங்களுக்கு இப்படியொரு அதிருப்தி இருக்குன்னா. அதுக்கு மிஸ்டர் ஜனார்த்தனன் மேல இருக்கிற அஃபக்ஷன் காரணமா இருக்கலாம். எனக்கு முன்னால இந்த போஸ்ட்ல இருந்தவர் அவர்தானே... அவரோட டாட்டர் தானே டி.ஸி. பி இந்துமதி..?” உதட்டில் பூத்த இளநகையோடு இயம்பினான்.

சந்திரன் முகத்திலும் வெளிச்சம் பரவியது. “எஸ், யூ ஆர் அப்ஸல்யூட்டிலி கரக்ட்... ஜனா மேல இந்துவுக்கு எப்பவுமே ஹீரோ இமேஜ் தான்... அவன் இடத்துக்கு நீங்க வந்திருக்கிறதை ஏத்துக்க முடியாம தான் இப்படி நடந்திக்கிட்டான்னு இப்போ புரிஞ்சிக்க முடியுது... சில்லி கேர்ள்...!” சிரித்துக்கொண்டே சொன்னவர், “ஜனாவுக்கு தெரிஞ்சா ரொம்பவும் வருத்தப்படுவான்...” லேசாகிவிட்ட மனதுடன் கூறினார்.
“அதுமட்டும் கிடையாது கமிஷனர் சார்.

அந்த ட்ரக் ட்ராபிக்கிங் கேஸ்ல இருந்து, எந்த காரணமும் சொல்லாம நீங்க அவங்களை ரிலீவ் பண்ணதுல என்னோட தலையீடும் இருக்கின்றதை தெரிஞ்சிக்கிட்டதால தான் இவ்ளோ கோபமா பேசிட்டு போறாங்க...” அவன் முகம் மலர்ந்து சொல்ல, இருவருக்கிடையே மெல்லிய சிரிப்பலை எழுந்தது.
“எஸ் சூர்யா! ஆனால், ஆரம்பத்துலையே உங்களுக்கும் இந்துவுக்கும் கான்ப்ளிக்ட் ஆகிடுச்சு... இதுக்கு அப்புறமும் உங்க சிஸ்டர் கேஸை இந்துவை ஹேண்டில் பண்ண சொல்லி போர்ஸ் பண்றதுல எனக்கு விருப்பம் இல்லை... அப்படியே போர்ஸ் பண்ணி ஒத்துக்க வச்சாலும் சரி வருமான்னு நீங்க யோசிங்க”

“ஒத்துவரும்னு நினைச்சு தான் உங்களை பேசச் சொன்னேன்... அவங்களை பார்த்தாலே தெரியுதே கரேஜியஸ் விமன்னு... இந்துமதி நோர்த் சென்னை டி.ஸியா சார்ஜ் எடுத்துக்கிட்ட இந்த பாஸ்ட் டூ இயர்ஸ்ல சிட்டியோட கிரைம் ரேட்ஸ் ரொம்பவே குறைந்திருக்கு. சென்னைக்கு வரதுக்கு முன்னாடியே அவங்க அட்டெண்ட் பண்ண கேஸ் ஹிஸ்டரி எல்லாம் படிச்சு பார்த்துட்டுத் தான் வந்தேன்... எடுத்துக்கிட்ட ஒவ்வொரு கேஸையுமே சக்சஸ் பண்ணிருக்காங்க... அதுவும் அந்த நகைக்கடை ஓனரோட பொண்ணு மர்டர் கேஸ்ல அக்யூஸ்ட்டை கண்டு பிடிச்சது... தட் வாஸ் பிரில்லியண்ட்... அவங்களை பற்றி தெரிஞ்சிக்கிட்டதுக்கு பிறகு என் தங்கை கேஸை அவங்களால சரியாக கொண்டு போக முடியும்னு எனக்கு ரொம்பவே நம்பிக்கை வந்திருக்கு. ஸோ, அவங்க என்னை பற்றி என்ன நினைத்தாலும் எனக்கு கவலை இல்லை..

அவங்க தான் இந்த கேஸை நடத்தணும்.
அதுக்காக நான் என்ன வேணும்னாலும் செய்ய தயாரா இருக்கேன்.
தேவைப்பட்டா, என் பதவிக்கு உண்டான பவரை யூஸ் பண்ணவும் தயங்க மாட்டேன்...” பிடிவாதத்துடன் கூடிய உறுதியான தொனியில் கூறியவன், சற்றே தணிந்து, “மிஸ் இந்துமதி அந்த அளவிற்கு என்னை போக விடமாட்டாங்கன்னு நினைக்கிறேன்.. ஐ ஹோப், அவங்க இந்த கேஸை எடுத்துப்பாங்கன்னு எனக்கு தோணுது...” இதமான குரலிலே முடித்தான்.
சந்திரனுக்கு சற்று ஆயாசமாகவே இருந்தது... சூர்யா, இந்து இருவருமே அவருக்கு வேண்டியவர்கள். முக்கியமான பதிவியிலும் இருப்பவர்கள்.. இருவருமே இறங்கி வராமல் அவரவர் நிலையிலே நின்றால் அவரால் தான் என்ன செய்ய முடியும். “நீங்க சொல்றது எல்லாமே சரி தான் சூர்யா...! சரி, எதுக்கும் நான் ஜனாகிட்ட இதைப்பற்றி பேசுறேன்.” யோசனையுடனே கூறிவிட்டு அவரும் விடைபெற்றார்.
இந்துமதிக்கு சூர்யாவின் முகத்தை கூட நேரில் பார்க்காமல் அவன் மீது எப்படி ஒரு நியாயமற்ற வெறுப்பு உருவாகி இருக்கிறதோ. அதற்கு எதிர்மறையாக சூர்யாவிற்கு ஆரம்பம் முதல் இந்துவின் மேல் நல்லெண்ணமும், பெருமதிப்பும் உருவாகி இருப்பது தான் விந்தை. இந்துவிற்கும் சூர்யாவின் மேலிருக்கும் வெறுப்பு மாறுமா...!

**தொடரும் :-**

## கீழே கொடுக்கப்பட்டுள்ள வார்த்தையை கட்டங்களில் வட்டமிடுக .

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வ | ய | ல் | பா | க | டு |
| பு | கே | ர | ட் | டு | ண் |
| பீ | றா | உ | டி | ண் | வ |
| ப | ட் | ட | ம் | ந | த |
| ண | ச | ரூ | இ | ஞ் | சி |
| ர | ல | ய | ட் | ரை | கீ |

வண்டு வயல்
பீட்ரூட்
புறா நண்டு
பட்டம்
கேரட் வண்டி
பாட்டி

## செல்வி. ஆதிரா அருண் பிரசாத்



செல்வி. கிருபண்யா சுரேஷ் மற்றும் செல்வி. அமண்டா லினெட்

# Best wishes from...

Culture & Cuisine
An Authentic Experience

**Home Style South Indian Catering,Training and Events**

**Revathy Sukumaran**
**+1(720)362-0873**
**revathys@cultureandcuisinellc.com**
**www.cultureandcuisinellc.com**

**Follow us on**

**@cultureandcuisinellc**